
பாலகுமாரன்
இரும்பு குதிரைகள்

'இரும்பு குதிரைகள்' என்ற

"கல்தோன்றி மண்தோன்றி கடவுள் தோன்றி
கைவழியே மொழி வளரும் காலம் தோன்றி
கால்நடையைச் செல்வமெனக் கொண்ட நாளில்
ஆண்டிருந்த ஓரரசன் பறையறிவித்தான்
வீட்டிற்கொரு குதிரை வளர்க்க வேண்டும்
வேண்டுகின்ற உதவிகள் அரசு செய்யும்
குதிரைகளே தேசத்தின் செல்வமாகும்
போர் வந்தால் புரவிகளை அரசே வாங்கும்

போர்க்களம் காணாத அரசே இல்லை
போராட்டம் இல்லாத காலம் இல்லை
போர்க்காலம் முன் கருதி புரவி வளர்ப்பீர்
பின்வரும் சந்ததிக்கு உறுதி கொடுப்பீர்
மீறுபவர் தேசத்தின் முதல் எதிரிகள்
மறுப்பவர்கள் வெளியேற்றப்படுவார் உறுதி
பறையடித்தும் ஊர் முழுதும் சேதி சொல்ல
ஜனம் கூடி தெரு நடுவே புலம்பலாச்சு
இவனென்ன பேயரசன் குதிரை வெறியன்

திடுமென்று குதிரைக்கு எங்கே போக...
குதிரைதான் செல்வமெனில் செந்நெல் என்ன
கொள்ளுமட்டும் பயிரிடவா வயலும் நீரும்
ஆடுகளோ உணவாகும் மாடுகளோ பயிர்வளர்க்கும்
மேய்ப்பதொன்றும் கடினமில்லை. கோல் அசையக் கூடவரும்
குடும்பத்து பெண்மணிக்கு குதிரைகளா கட்டுப்படும்?
குரல் கொடுத்தால் நாய்போல புரவிகளா துணையாகும்?
இவன் என்ன பேயரசன் குதிரை வெறியன்...

பார்ப்பனர்கள் சிலர் கூடி தமக்குள் பேசி
முடிவாக திடமாக சபைக்குள் சென்று

தமக்கு மட்டும் கட்டளையைத் தளர்த்துமாறு
பணிவாக அறிவித்தார் காரணம் சொன்னார்
வேதங்கள் சொல்லுகையில் குதிரை கனைக்கும்
பாடத்தில் முழுமுனைப்பு சிதறிப் போகும்

தோல்பொருளை பார்ப்பனர்கள் தொடக்கூடாது
வாரின்றி குதிரைகள் வசப்படாது
போருக்கும் பார்ப்பனருக்கும் பொருத்தமில்லை
போரில்லா வாழ்க்கையிதே எங்கள் கொள்கை
பேரரசன் யோசித்தான் தலையசைத்தான்
பார்ப்பனர்கள் குதிரைக்கு விலக்கு என்றான்.

பார்ப்பனர்கள் சபைநீங்க வணிகர் வந்தார்
வைத்தியரும் கொல்லரோடு சேர்ந்து கொண்டார்
எங்களுக்கும் விலக்களிப்பாய் தேரா மன்னா
வணிகத்தில் எருதுகளே உதவியாகும்
பொதி சுமக்கும் கழுதைகளே போதும் எமக்கு
ஊர் சுற்றும் வேலையிலே நாங்கள் இருக்க
பெண்டுகளே பிறவேலை செய்தல் வேண்டும்
புரவிகளைப் பெண்டுகளால் ஆளமுடியுமா?
பேரரசே தயைசெய்யும் இது தாங்க முடியுமா?
மன்னவனும் மனு ஏற்றான் விலக்கு என்றான்.

வந்தவர்கள் சபை மீள கூட்டமாக
தொழில் தெரிந்த சூத்திரர்கள் முன்னே சென்றார்
குதிரைகள் பேணுதற்கு வசதியில்லை
முன் பின்னே இது குறித்து பழக்கமில்லை
கைகாலே துணையாக உழைப்போர் நாங்கள்
போரென்றால் கால்படையின் அங்கம் நாங்கள்
குதிரைகள் சுமை எமக்கு உதவிதராது
உழவுக்கோ கவலைக்கோ துணையாகாது
மன்னவனும் தலையசைத்தான் சரியே என்றான்
படைவீரர் மேற்கொள்வார் போகச் சொன்னான்.

படைவீரர் பெருமறவர் கூட்டம் போட்டார்
முடிவாக அரசனிடம் வணக்கம் சொன்னார்
போர்க்காலம் குதிரைகள் தேவையெனினும்
போர் எதிரி யானையுடன் வந்து நின்றால்
குதிரைகள் என் செய்யும் கலைந்து போகும்

படைவீரர் தெருவுக்கு ஒரு யானை வளர்ப்பார்
முறைபோட்டு அனுதினமும் பேணிக் காப்பார்
வீட்டுக்கொரு குதிரைஎன்ற விதியினின்று
பேரரசே விலக்களிப்பீர், யானை தருவீர்.

பேரரசன் யோசித்தான் கவலை சூழ
கையசைத்தான் மறவர்கள் கலைந்துபோக
மறுநாளே சபைகூட்டி எழுந்து நின்று
பெருமன்னன் குரல் செருமி பேசலானான்
குதிரையெனச் சொன்னது விலங்கா மக்காள்
புரவியதன் மகிமையதைத் தெரியா ஜனமே
வீட்டுக்கொரு வலிமையுள்ள மனிதர் என்று
நான் சொன்ன செய்தியது தவறோ சொல்வீர்

குதிரையதை சபைநடுவே நிறுத்திப்பாரும்
உடல் முழுவதும் கைதடவி உணர்ந்து பாரும்
எவ்வளவு தின்றாலும் குழிந்த வயிறு
எப்போதும் எப்போதும் துடித்த உணர்வு
கண்மூடி நின்றாலும் காதுகேட்கும்
காதுகளே நாலுபக்கம் சுற்றிப் பார்க்கும்
உடல் வலிமை இருந்தாலும் மூர்க்கம் காட்டா
குதிரை குணம் கொண்டவர்கள் உயர்ந்தோர் ஆவார்

போர் என்றால் குத்தீட்டி யுத்தம் அல்ல
மனிதரோடு மனிதர் வெட்டி சாய்தல் அல்ல
பெருவாழ்க்கை தனைநோக்கிக் காலம்போகும்
தன்மையினைப் போரென்றேன் வேறொன்றில்லை
புரியாத என்மக்காள் மந்தை ஆடே
உமக்கிங்கே அரசனாக வெட்கம் கொண்டேன்
வெறும் பதரைக் கோல்பிடித்து காப்பார் உண்டோ?
உணர்வில்லாத ஜனத்துக்கு அரசன் கேடோ

ஒருகாலம் இவ்வுலகம் கொள்ளும் கண்டீர்
குதிரைகளே உலகத்தின் பெருமூச்சாகும்
குதிரைகளே இப்புவியில் செங்கோல் ஓச்சும்
விரல் நுனியால் விசையறிந்து வேகம் காட்டும்

உழவுக்கும் தொழிலுக்கும் உதவியாகி
ஊர்விட்டு ஊர்போகக் கருவியாகி
விண்முட்டிக் கீழிறங்கி அனைத்துச் செயலும்
குதிரையே முன் நின்று நடத்தும் கண்டீர்

கலியென்ற காலமுண்டு இத்தரை மீதில்
கடவுளெனக் குதிரைவரும் ஆட்சிசெய்யும்
பல்வேறு ரூபத்தில் மனிதர் முன்னே
குதிரையெனும் பெருவுணர்வே கைகொடுக்கும்
வளமான வாழ்வுண்டு மனிதர் அன்று
தேவரென வலம் வருவார் சொல்வேன் கண்டீர்
கால்நடையில் ஆடுகளே செல்வம் என்ற
மக்களிடம் மன்னனென இருத்தல் வேண்டா
பசுக்களெனும் பார்ப்பனர்கள் காலம் முடிந்து
குதிரையிது வீணையிலே வேதம் பேசும்
காலத்தை என்னுள்ளே இன்றே கண்டேன்
போய் வருவேன் என்மக்காள் விடை கொடுப்பீர்
உம்மோடு இருத்தல் இனி இயலாதென்றான்
பெருமன்னன் வாள் வீசி தன் தலை துணித்தான்

கலியென்னும் குதிரையதன் ஆட்சியின்று
கண்திறக்கத் துவங்கி விட்ட நேரம் கண்டோம்
தலைதுணித்த பெருமன்னன் வருவான் மீண்டும்
முகம்மட்டும் குதிரையாகக் கொண்ட வாறு
குரங்குகளை மூத்தோரமாய் கொண்ட மனிதர்
குணம் மாறி குதிரைக்கு வணக்கம் சொல்வார்
கலியென்ற குதிரை தன் ஆட்சி துவங்கும்
மனிதருக்குள் மறுபடியும் நேசம் துளிர்க்கும்

யாகங்கள் பூஜைகள் பூர்த்திசெய்யா
ஸ்நேகத்தை குதிரைகள் வளர்த்துக் கொடுக்கும்
குழப்பங்கள் முற்பரப்பில் தோன்றினாலும்
குதிரைகள் விஞ்ஞானம் உலகம் வளைக்கும்
குதிரைகள் ஞானத்தை என்னுள் கண்டேன்
கலியென்னும் யுகத்துக்கு வரவு சொன்னேன்.